**நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2016**

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 5685 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II (சீ) (3) ஆம் உறுப்புரை மற்றும் 2010 யூலை 31 ஆந் திகதிய சர்வதேச அவிவிருத்தி சங்கத்தின் கடன்கள் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09(ஆ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் தண்ணீர் சேவைகள் குழாயிடுவதற்கான அணுகுவழிகள் மற்றும் முன்னேற்றப்பட்ட சுகாதாரம் என்பவற்றினை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 24,458.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.9 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 21,945 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப முற்பணங்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப முற்பணங்கள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்ததென்றும், மற்றும்

(உ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நேரொத்த தொகைகள் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இலங்கை அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட ரூபா 14.19 மில்லியன் தொகையான கடன் மீதிகளின் வட்டி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பின் கீழ் காட்டுதற்குப் பதிலாக வெளிநாட்டு கடனின் கீழ் கணக்கிடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் மீதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம், வேலைகளின் பூர்த்தியாக்கலின் பின்னர் முற்பணங்கள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 06 சந்தர்ப்பங்களில்

செய்யப்பட்ட ரூபா 1.20 மில்லியன் கூட்டுத் தொகையான முற்பணங்கள் உரிய வேலைகளின் பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து 01 இலிருந்து 04 மாதங்கள் வரையான தாமதங்களுடன் தீர்க்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் பொருளிருப்பு விடயங்கள் மீதான மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டுச் சபை மற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2016 ஆம் ஆண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 165.00 | 21,945.00 | 2,200.00 | 9.58 | 1,381.44 | 9.58 | 1,381.44 |
| இலங்கை அரசாங்கம் | 5.00 | 665.00 | 57.17 | 0.43 | 58.06 | 0.48 | 64.90 |
| சமுதாய பங்களிப்பு | 13.90 | 1,848.70 | - | | - | - | - |
| **மொத்தம்** | **183.90** | **24,458.70** | **2,257.17** | **10.01** | **1,439.50** | **10.06** | **1,446.34** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 2,200 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,381.44 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் செயற்பாடுகளின் முதலாவது ஆண்டின் போது 9.60 சதவீத நிதிமுன்னேற்றம் அடையப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2.16 சதவீத நிதி முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு முழுக் காலப்பகுதிக்கான விரிவான திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால் குறித்த நோக்கங்களிற்காக நிதியளிப்பு உடன்படிக்கையால் ஒதுக்கப்பட்ட நிதிகளின் பயன்பாட்டு காலங்களின் ஆபத்து கணக்காய்வில் மதப்பிட முடியவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நகர, கிராம மற்றும் தோட்டத்துறை நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கம், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் இயலளவை வலுப்படுத்தல், பயிற்சி மற்றும் தண்ணீர் தர மதிப்பிடல் ஊடாக துறை இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்ற பெயரில் 04 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டன. செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாணண்டின்

போது தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட நகர, கிராம மற்றும் தோட்டத்துறை நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் திட்டக் கூறின் கீழ் பதுளை, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் சிவில் நிர்மாண வேலைகள், சிவில் வேலைகளிற்காக பொருத்தமான காணித்துண்டுகளை கொள்வனவு செய்வதற்கு செயற்திட்டத்தால் முகம்கொடுத்த பிரச்சனைகள் காரணமாக மீளாய்வாண்டு இறுதிவரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட சுகாதார திட்டங்கள், நலனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அமுலாக்கல் காலப்பகுதி போன்றில் பிரதேச செயலகங்களில் சுகாதார திட்டங்கள் மீதான தகவல்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு கிளிநொச்சி, பாதுளை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்பட்ட சுகாதார திட்டங்கள் இனங்காணப்பட்டு செயல்நடவடிக்கை திட்டத்துடன் ஒப்பிட முடியாதிருந்தது.

(ஆ) பதுளை மற்றும் கேகாலை மாவட்டங்களில் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படட நீர் வழங்கல் திட்டங்களிற்கான மண் பரிசோதனை நடவடிக்கைகள் நடாத்துவதற்கு 2016 யூன் மாதத்தில் தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 2.41 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய அறிக்கைகள் 2017 யூன் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன்விளைவால், உரிய காணித்துண்டுகள் செயறற்திட்டத்தால் சுவீகரிக்க முடியாதிருந்தது.

(இ) செயறற்திட்டம் ரூபா 370,000 மாதாந்த வாடகையில் 05 ஆண்டுகளுக்காக வாடகை அடிப்படையல் நுகேகொடையில் வேண்டுகை பட்டோலையின் 1.1.3 ஆம் பிரிவின் பிரகாரம், கட்டிடமொன்று கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. 40 பேர் காணித் துண்டுகள் பெறப்பட வேண்டுமெ வேண்டப்பட்டிருந்த போதிலும் 10.76 பேர்ச் காணித்துண்டுகள் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு கொண்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்தின் 2016 மார்ச் 24 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக செயற்திட்டம் வெளியார் கம்பனியொன்றிடமிருந்து 62 ஊழியர்கள் ஈடுபடுத்தியிருந்தது என அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது அவர்களுடைய சம்பளங்கள் மற்றும் வேறு படிகளிற்காக ரூபா 7.72 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்டிருந்தது.